மக்களால் நமது அரசு
மக்களுக்காகவே நமது அரசு





# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

## மானியக் கோரிக்கை எண் - 15

## சுற்றுச்சூழல்

அறிவிப்புகள்
2017 - 2018

P & D Section

# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

## மானியக் கோரிக்கை எண்-15

## சுற்றுச்சூழல்

## அறிவிப்புகள்
## 2017–2018

**K.C. கருப்பணன்**
சுற்றுச்சூழல் துறை அமைச்சர்

கொண்டு, வாரிய பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞான அலுவலர்களுக்கு, தலைசிறந்த நிறுவனங்களின் மூலம் உயர்திறன் பயிற்சி, வாரிய நிதியிலிருந்து, நடப்பு நிதியாண்டிலிருந்து, ஒவ்வொரு வருடமும் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 25 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

**K.C. கருப்பணன்**
சுற்றுச்சூழல் துறை அமைச்சர்



சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

2017–2018 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்

## சுற்றுச்சூழல் மற்றும் மாசு கட்டுப்பாடு

**1. தேசிய பசுமைப்படை சூழல் மன்ற மாணவ, மாணவியர்களுக்கு சூழல் போட்டிகள் நடத்தி, சூழல் சுற்றுலா அழைத்துச் செல்ல மாவட்டத்திற்கு ரூபாய் இரண்டு இலட்சம் செலவில் 32 மாவட்டங்களில் நடத்துதல்.**

ஒவ்வொரு பள்ளியிலும் ஏறத்தாழ 40 முதல் 50 மாணாக்கர்களை உறுப்பினர்களாகக் கொண்டு, மாவட்டத்திற்கு 250 பள்ளிகள் வீதம் தற்போது 8000 தேசிய பசுமைப்படை சூழல் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் தமிழகத்தில், மாநிலத்தின் நிதி ஆதாரத்துடன் 11469 சூழல் மன்றங்கள் இயங்கி வருகின்றன. சுற்றுச்சூழல் மன்ற உறுப்பினர்கள், பேரணிகள், மனிதச் சங்கிலி, கருத்தரங்குகள், கருத்துப்பட்டறைகள்,

மரம் வளர்த்தல் மற்றும் பள்ளி வளாகத்தினை தூய்மையாக்குதல் போன்ற பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த மாணாக்கர்களின் செயல்திறனை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு அனைத்து 32 வருவாய் மாவட்டங்களிலும், தேசிய பசுமைப்படை சூழல் மன்ற மாணாக்கர்களுக்கு வினாடிவினா, பேச்சுப்போட்டி மற்றும் ஓவியப்போட்டி ஆகிய மூன்று இனங்களில், எட்டாம் வகுப்பிற்கு கீழ் மற்றும் எட்டாம் வகுப்பிற்கு மேல் என இரண்டு பிரிவுகளாக சூழல் போட்டிகள் நடத்தப்படும்.

மேலும், சூழல் முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கைகளை நேரடியாக உணரும் பொருட்டு, வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களை, தனித்தனிக் குழுவாக, ஒரு நாள் சூழல் சுற்றுலாவாக, அருகில் உள்ள சூழல் முக்கியத்துவம் வாய்ந்த வனப்பகுதிகள் மற்றும் வனவிலங்குகள் சரணாலயங்களுக்கு அழைத்துச் செல்ல உத்தேசிக்கப்பட்டுள்ளது.



**7. வாரியத்தின் பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞான அலுவலர்களுக்கு உயர்திறன் பயிற்சி ரூபாய் 25 இலட்சம் செலவில் வழங்கப்படும்.**

எந்த ஒரு நிறுவனத்தின் வளர்ச்சிக்கும், திறமையை உயர்த்துவதும், பணி முடிக்கும் ஆற்றலும் அவசியமாகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 198 பொறியாளர்களையும், 64 சுற்றுச்சூழல் விஞ்ஞான அலுவலர்களையும் கொண்டு இயங்கி வருகிறது. சமீப காலத்தில் மாசினை கட்டுப்படுத்துவதிலும், சுற்றுச்சூழலைக் காப்பதிலும், புதிய தொழில்நுட்பங்கள் நடைமுறைக்கு வந்துள்ளன. இதனை, தொழிற்சாலைகள் அமலாக்கம் செய்கின்றனவா என்பதை கண்காணிக்க வாரிய பொறியாளர்களுக்கு சிறந்த பயிற்சி தேவைப்படுகிறது. மேற்கூறியவற்றை கருத்தில்

பொறியாளர் அலுவலகங்கள், நான்கு மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களின் செயல்பாடுகளை கண்காணிப்பதில் அதிக சிரமம் ஏற்படுகின்றது. தென் மாவட்டங்களில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனிப்பட்ட சூழல் பிரச்சனைகள் உள்ளன. மேலும், தென் மாவட்டங்களில் உள்ள பொது மக்கள் மற்றும் தொழில் முனைவோர் மண்டல அலுவலகம் வருவதற்கு அதிக சிரமம் ஏற்படுகின்றது. எனவே, இதனை கருத்தில் கொண்டு திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் நாகர்கோவில் ஆகிய மாவட்ட அலுவலங்களை உள்ளடக்கி, ஒரு புதிய மண்டல அலுவலகம், இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் உரிய பதவிகளுடன் நடப்பு நிதி ஆண்டில் வாரிய நிதியிலிருந்து **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 1 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.



மேற்கண்ட நடவடிக்கைகளுக்காக மாவட்டத்திற்கு ரூபாய் இரண்டு இலட்சம் செலவில், 32 மாவட்டங்களுக்கு மொத்தம் ரூபாய் 64 இலட்சம் செலவில் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** மேற்கொள்ளப்படும்.

2. அனைத்து 32 மாவட்டங்களிலும் தேர்வு செய்யப்பட்ட, 960 பள்ளிகளின் தேசிய பசுமைப்படை மற்றும் சூழல் மன்ற மாணாக்கர்களின் ஈடுபாட்டுடன், பள்ளிக்கு தலா ரூபாய் 15,000/– செலவீட்டில் மரக்கன்றுகள் நட்டு பராமரித்தல்.

பள்ளி வளாகங்களில் மரங்களை நட்டு தூய்மையானதாகவும், பசுமையானதாகவும் பராமரிக்கும் பணியில் சூழல்மன்ற மாணவர்களை ஈடுபடுத்த, 32 மாவட்டங்களில், தேர்வு செய்யப்பட்ட, தலா 30 பள்ளிகளில் ஒவ்வொரு மாணாக்கரும் ஒரு மரம் நட்டு பராமரித்து வர உறுதி செய்து, ஒவ்வொரு பள்ளியிலும் 50 மரங்கள் நட்டு பராமரிக்கப்படும்.



6. திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு, இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் ஒரு புதிய மண்டல அலுவலகம் ரூபாய் 1 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 6 மண்டல அலுவலகங்களைக் கொண்டு இயங்கி வருகின்றது. இதில் மதுரை மண்டல அலுவலகத்துடன், மதுரை, திண்டுக்கல், தேனி, சிவகங்கை, இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் நாகர்கோவில் ஆகிய 9 மாவட்ட அலுவலகங்கள் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இதனால் மதுரை மண்டலத்தின் இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் மேற்படி 9 மாவட்டங்களில் உள்ள 17 வகையான அதிக மாசுபடுத்தும் தொழிற்சாலைகளை ஆய்வுசெய்தல் மற்றும் மண்டலத்தில் உள்ள 9 மாவட்ட சுற்றுச்சூழல்

பல்கலைக்கழகங்கள்/ சிறந்த மையங்களுக்கும் நடப்பு ஆண்டிலிருந்து, வாரிய நிதியிலிருந்து **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 2 இலட்சம் ஒதுக்கீடு செய்து இப்பசுமை விருதுகள் நீட்டித்து வழங்கப்படும்.



மரக்கன்றுகள் நடுதல், பராமரித்தல், மாணாக்கர்களுக்கு சான்றுகள் மற்றும் ஊக்கத்தொகை வழங்குதல் ஆகியவற்றிக்கு பள்ளி ஒன்றுக்கு ரூபாய் 15,000/– வீதம் இத்திட்டத்தின் கீழ் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 144 இலட்சம் செலவிடப்படும்.

**3. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின், ஊட்டி மற்றும் திருப்பூர் (வடக்கு) ஆகிய 2 மாவட்ட அலுவலகங்களுக்கு ரூபாய் 4 கோடி செலவில் புதிய அலுவலகக் கட்டிடம் கட்டப்படும்.**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் 36 மாவட்ட அலுவலகங்களுக்கு சொந்த கட்டிடம் கட்ட உத்தேசித்துள்ளது, இவற்றில் ஏற்கனவே 21 மாவட்ட அலுவலகங்கள் சொந்த கட்டிடத்தில் இயங்கி வருகின்றன. 3 மாவட்ட அலுவலகங்களுக்கான கட்டிட பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் 4 மாவட்ட அலுவலகங்களுக்கான கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு வாரியத்தால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில், ஊட்டி மற்றும் திருப்பூர் (வடக்கு) ஆகிய 2 அலுவலகங்களுக்கான சொந்த கட்டிடங்கள் வாரிய நிதியிலிருந்து **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.



**5. சுற்றுச்சூழல் மேம்பாட்டில் சிறந்து விளங்கும் கல்வி நிறுவனங்களுக்கு நடப்பாண்டு முதல் ரூபாய் 2 இலட்சம் செலவில் பசுமை விருதுகள் வழங்கப்படும்.**

சுற்றுச்சூழலுக்கு உகந்தவாறு காற்று மற்றும் நீரினை வெளியேற்றும் தொழிற்சாலைகள், திட மற்றும் அபாயகரமான கழிவுகள் மேலாண்மை மற்றும் பசுமை போர்வை வளர்ச்சியை கையாள்வதில் சிறந்த முறைகளை பின்பற்றும் தொழிற்சாலைகளுக்கு, ஒவ்வொரு ஆண்டும், பசுமை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுபோன்று, மாவட்டங்களில் சுற்றுச்சூழலை மேம்படுத்த, நடவடிக்கைகள் மேற்கொண்ட மாவட்ட ஆட்சியர்களுக்கும் பசுமை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதை கருத்தில் கொண்டு சுற்றுச்சூழல் மேம்பாட்டில் சிறந்து விளங்கும் கல்வி நிறுவனங்கள்/

தொழிற்சாலைகள் உள்ளன. முக்கியமான பெரிய மின் நிலையங்கள், வார்ப்படத் தொழிற்சாலைகள், துறைமுகம், கப்பல் கட்டுமானம், சிட்கோ வளாகம் ஆகியவைகளும் உள்ளன.

திருவள்ளூர் மற்றும் அம்பத்தூர் மாவட்ட அலுவலகங்களின் பணிச் சுமையினை கருத்தில் கொண்டும், நிர்வாக வசதிக்காகவும், இந்த நிதியாண்டில் வாரிய நிதியிலிருந்து **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 1 கோடி செலவில் கும்மிடிபூண்டியில், ஒரு மாவட்ட அலுவலகம் உருவாக்கப்பட உள்ளது.



**4. நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தை தலைமை இடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்ட அலுவலகமும், திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிபூண்டியில் ஒரு மாவட்ட அலுவலகமும் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் நாமக்கல் மற்றும் சேலம் மாவட்ட அலுவலகங்களின் கீழ், முறையே 1415 மற்றும் 2139 தொழிற்சாலைகள் கண்காணிப்பில் உள்ளன. இவற்றில் குமாரபாளையம் மற்றும் பள்ளிப்பாளையம் வட்டங்களில், அதிக அளவில் துணி சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் உள்ளன. தற்போது மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் நாமக்கல் அலுவலகத்திலிருந்து பள்ளிபாளையத்தை சென்றடைய 50 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது. அதேபோல் சேலத்திலிருந்து எடப்பாடிக்கு சென்றடைய 45 கிலோ மீட்டர் பயணம்

செய்ய வேண்டியுள்ளது. இவற்றை தவிர்க்கவும், புதிதாக ஏற்படுத்தப்படவுள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான பணிகளை துரிதப்படுத்தும் நோக்கத்துடனும், இந்த நிதி ஆண்டில் குமாரபாளையம், பள்ளிப்பாளையம், எடப்பாடி மற்றும் சங்ககிரி ஆகிய, நான்கு வட்டங்களை உள்ளடக்கி, ஒரு புதிய மாவட்ட அலுவலகத்தை உரிய பதவிகளுடன், வாரிய நிதியிலிருந்து **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 1 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

## கும்மிடிபூண்டியில் மாவட்ட அலுவலகம்

திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் திருவள்ளூர்



மற்றும் அம்பத்தூர் ஆகிய இரண்டு இடங்களில் உள்ளன. அம்பத்தூரில் உள்ள மாவட்ட அலுவலகத்தின் அதிகாரத்தின் கீழ் 5 வட்டங்களும், 2725 தொழிற்சாலைகளும் உள்ளன. அதேபோல், திருவள்ளூரில் உள்ள மாவட்ட அலுவலகத்தின் அதிகாரத்தின் கீழ் 6 வட்டங்களும், 1542 தொழிற்சாலைகளும் கண்காணிப்பில் உள்ளன. கும்மிடிபூண்டி வட்டத்தில் 396 தொழிற்சாலைகள் உள்ளன. முக்கியமான பெரிய மின் நிலையங்கள், வார்ப்படத் தொழிற்சாலைகள், சிப்காட் தொழில் வளாகம், பொது அபாயகர கழிவு சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் மையம், இரும்பு கம்பி தயாரிக்கும் தொழிற்சாலைகள் முதலியன இவ்வட்டத்தில் உள்ளன. வாரியம் ஒரு இணைய வழி தொடர் காற்று தர கண்காணிப்பு மையத்தினை கும்மிடிபூண்டியில் நிறுவி உள்ளது. பொன்னேரி வட்டத்தில் 367